திருவண்ணாமலை மாநகரில் அண்ணாமலையார் மலைஅடிவாரகுடியிருப்போர் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநகரமேயர் நிர்மலாவேல்மாறன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியாவிஜயரங்கன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர்கள் அருள்குமரன், லையா இரா.கார்த்திகேயன் உட்படபலர் உள்ளனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் முத்துராமன் இல்ல திருமணவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

உசிலம்பட்டி அருகே

நர்சிங் படிக்க விரும்பிய சிறுமி தற்கொலை!

கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை,ஆக.31

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

உசிலம்பட்டி அருகே 16 வயது தலித் சிறுமி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது.

தனது எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் பள்ளிச் சேர்க்கைக்காகச் சென்ற அந்தச் சிறுமி, அங்கு அவமானப் படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில், மனவேதனை

யில் அச்சிறுமி உயிரை மாய்த்துக் கொண்டதால், அவரது குடும்பம் நிலை குலைந்து போயுள்ளது.

ஒவ்வொரு குழந்தைக்கும் மரியாதையும், கண்ணிய மும், பாதுகாப்பான கல்விச் சூழலும் கிடைப்பது அவர்க ளின் உரிமை. இது போன்ற மனவேதனைக்கு எந்தக் குழந்தையும் தள்ளப்படக் கூடாது.

இந்தச் சம்பவம் தொடர் பாக முழுமையான விசா ரணை நடத்தி, குற்றவாளிக ளுக்குத் தகுந்த தண்டனை வழங்கி, நீதி நிலை நாட்டப்ப டுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தமது விட்டர் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ திட்டத்தின் கீழ்

அர்ச்சகர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலியுறுத்தல்!

சென்னை, ஆக.31-

‘அனைத்துச் சாதியி னரும் அர்ச்சகர் ஆக லாம்’ திட்டத்தின் கீழ் அர்ச்சகர்களை நிய மிக்க அரசு நடவ டிக்கை எடுக்க வேண் டும் என்று சட்டப் பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வலி யுறுத்தினார்.

சட்டப்பேரவையில் பி.கே.சேகர்பாபு பேசி யதாவது:-

அனைத்துச் சாதியி னரும் அர்ச்சகராக லாம் திட்டத்தின்கீழ், எங்கள் ஆட்சி பொறுப் பேற்றவுடன், 32 நபர் க ள் நியமிக்கப்பட்டார் கள். நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறுகிறார்கள் என்ப தையறிந்து, எங்கள் முதலமைச்சர் அவர் கள், ஞாயிற்றுக்கிழ மையன்று அந்தத் திட் டத்தை நிறைவேற்றி, திங்கட்கிழமை நீதிமன் றத்திற்குச் செல்வதைத் தடுத்த முதல்வர் எங் கள் முதல்வர். (மேசை யைத் தட்டும் ஒலி)

அதன் பிறகு ஏன் தொடர்ந்து வழங்க வில்லை என்று பொதுப் பணித்துறை அமைச்சர்

அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். நல்ம னம் படைத்தோர் உட னடியாக உச்சநீதிமன் ற த் தை த அ ணு கு கி ற ா ர் க ள் . ஆகம கமிட்டி அதற் கான தீர்ப்பு வழங்கி, எ ந் தெ ந் த த் திருக்கோயில்கள் ஆக மத்திற்குள் வருகின் றன, எந்தெந்தத் திருக்கோயில்கள் ஆக மத்திற்கு வெளியே இருக்கின்றன என்ற முடிவு தெரிந்த பிறகு தான், அனைத்து சாதி யினரும் அர்ச்சகராக லாம் திட்டத்தின்கீழ் அர்ச்சகர்களை நியமிக் கலாம் என்று ஒரு தீர்ப்பு வந்தது.

அதில், உயர்நீதிமன் றமே நேரடியாக இரு வரை அந்த கமிட்டிக்கு தலைவராகவும், உறுப் பி ன ர ா க வு ம் நியமிக்கிறது. அரசின் சார்பில் 3 பேர் நியமிக் கப்படுகிறார்கள். நம்மு டைய பொதுப்பணித் துறை அமைச்சருக்குத் தெரியும்; சமீபத்தில் கூட உச்சநீதிமன்றத் தில் அந்த ஆகம கமிட்டி இறுதி செய்ய வேண்டுமென்ற அந்த வழக்கு வந்தபோது, அதற்கு மேலும் 6 மாதக்காலம் வேண்டு மென்று மீண்டும் நீங் கள் கேட்டிருக்கிறீர் கள். நான் கேட்டுக்கொள்வதெல் லாம், அதற்காக தனி யாக G.O. வெளியிட்டு, உச்ச நீதிமன்றத்திலே 3 மூத்த வழக்கறிஞர் களை நியமித்து, அந்தச் சட்டப் போராட் டத்தை ஆட்சி இருந்த வரை நடத்தினோம்;

இந்த ஆட்சிக்குப் பிறகும் அந்த சட்டப் போராட்டத்தை நாங் கள் நடத்த தயாராக இருக்கின்றோம். ஆகம கமிட்டி ஆகமம், ஆக மம் இல்லாத திருக்கோ யில்களை முடிவு செய் கின்ற பொறுப்பு உங்களிடம் இருக்கின் றது. ஆகவே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களும் பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய எங் கள் தளபதி அவர்களும் காட்டிய வழியில் இந்த அரசு செயல்பட்டு

‘அனைத்துச் சாதியின ரும் அர்ச்சகர் ஆகலாம்; திட்டத்தின்கீழ் அர்ச்ச கர்களை நியமிக்க நீங் கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் கள், உள்நோக்கம் கற் பிக்கின்ற வகையில் அனைத்து சாதியின ரும் அர்ச்சகராகும் வழக்கு தொடர்பாக நீதிமன்றம் குறித்து ஒரு கருத்தைச் சொன்னார். உண்மையில் சொல்கி றோம், மனசாட்சி யோடு, வருத்தப்பட்டு சொல்கிறோம்.

இந்த வழக்கைப் பொறுத்தளவில் மதத் தால், இனத்தால், மொழியால் மக்க ளை ளப் பிளவுபடுத்துகின்ற சக் திகள்தான் உச்ச நீதி மன்றத்தில் தடை பெறச் சென்றதே தவிர, திராவிட இயக்க கொள்கையை, திரா விட இயக்க சி த் த ா ந் த த் த ை கொண்ட நாங்கள் அதனை முழுமையாக எதிர்த்தோம்.

இவ்வாறு பி.கே. சேகர்பாபு பேசினார்.

ஸ்டான்லி அரசு மருத்துவமனையில்

மருத்துவக் கழிவுகள், குப்பை தேக்கம்!

தொற்று நோய் பீதியில் நோயாளிகள்!

சென்னை,ஆக.31:

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை வளா கத்தில் மருத்துவக் கழிவு கள், குப்பை தேக்கமடைந் துள்ளதால் கடும் துர்நாற்றம் வீசுவதோடு, தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. வண்ணாரப் பேட்டை பகுதியில் ஸ்டான்லி அரசு மருத்துவம னையில் நாள்தோறும் உள்நோயாளிகள், புறநோ யாளிகள் என ஆயிரத்துக் கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இங்கு, ஒட்டுறுப்பு, கல்லீ ரல், சிறுநீரக பாதிப்பு, இத யம் தொடர்பான பாதிப்பு கள், எலும்பு முறிவு, நரம்பியல் துறை, கண் சிகிச்சை, பல் மருத்துவம் முழு உடல் பரிசோதனை மையம், குழந்தைகள் சிகிச்சை மையம் என பல் வேறு சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

இந்த மருத்துவமனை யில் உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தாலும், அவ்வப்போது மருத்துவம னையை சுற்றி சர்ச்சைக ளும், விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளது. தற்போது, மருத்துவமனை யின் பிணவறைக்கு அருகில் மருத்துவமனையில் உப யோகப்படுத்தப்பட்ட மருத்துவக் கழிவுகள், குப்பை போன்றவை திறந் தவெளியில் கொட்டப் பட்டு தேக்கமடைந் துள்ளது.

இவற்றை தரம் பிரித்து அகற்றப்படாமல் ஒட்டு மொத்தமாக ஒரே இடத் தில் குவித்து வைத்துள்ள தால் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், கொசு உற் பத்தி அதிகரித்து வருகிறது. இதனால், நோயாளிகளுக் குத் தொற்று நோய் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

மேலும், அந்தக் குப்பை கழிவுகளை பன்றிகள் கிளறு வதுடன், பிணவறை வரை சுற்றி திரிவதால், மருத்துவ மனை வளாகத்தில் சுகாதா ரமற்ற சூழல் நிலவுகிறது. எனவே, பொதுமக்களுக் கும், நோயாளிகளுக்கும் நோய் தொற்று நோய் பாதிப்பும், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தும் அவல நிலையில் உள்ள மருத்துவக் கழிவுகள், குப்பையை விரைந்து அகற்ற மருத்துவ மனை நிர்வாகமும், சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரிகளும் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும், என்று பொதுமக்கள் தெரிவிக்கின் றனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழ்நாடு கைப்பந்து விளையாட்டு தலைவருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாநில அளவில் ஆண்களுக்கான கல்லூரி அளவிலான Dawn To Dusk கைப்பந்து சாம்பியன்ஷிப் இறுதி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியால்

தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் பாதுகாப்பைக் குறைப்பதா?

தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை,ஆக.31-

“அரசியல் காழ்ப்புணர்ச் சியால் தி.மு.கழகத் தலை வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் பாதுகாப்பை குறைப்பதா?” என்று தமீ முன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதி விட்டிருப்பதாவது:-

முன்னாள் முதல்வரும், திமுகவின் தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொடுத்து வந்த உயர் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு குறைத்தது ஆச்சரியம் அளிக்கிறது. இது போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்வது காழ்ப்புணர்ச்சி அரசியலின் வெளிப்பாடா கவே கருதப்படும்.

இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதி விட்டுள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57 வது வட்டத்தில் 30.08.26 ஞாயிற்றுக்கிழமை டி.என்.பி.எஸ்.சி சாலையில் பாஞ்சாலை அம்மன் திருக்கோவில் ஆடி திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே. சேகர்பாபு கலந்துகொண்டு பொதுமக்களுக்கு உணவு வழங்கி சிறப்பித்தார். விழாவில் பகுதி செயலாளர் எஸ்.முரளி, டி. சதீஷ்குமார்,ஜி.ராம்மூர்த்தி,டி.,ஆர்.பி.ரமேஷ்,பி. செந்தில்குமார். மற்றும் கழக நிர்வாகிகள் செயல் வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.